இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 21.09.2026

# மதுரை மீனாட்சி சாட்சியாக...

**தி**ராவிட மாடல் ஆட்சியில் ஐந்தாண்டு காலத்தில் 4 ஆயிரத்து 677 கோவில்களுக்கு திருக்குடமுழுக்கு செய்யப்பட்டது. ஒரு இடத்தில் கூட ஒரு சிறு பிரச்சினை கூட எழவில்லை. பக்தர்கள் அனைவரும் உரிய மரியாதையுடன் பங்கெடுத்து மனமகிழ்ச்சியோடு திரும்பினார்கள். திராவிட மாடல் ஆட்சியில் இந்து சமய அறநிலையத் துறை மிகச் சிறப்பாகச் செயல்பட்டது என பக்தர்கள் அனைவரும் பாராட்டினார்கள். கட்சி சார்பற்ற வகையில் வெளியில் உள்ள அனைவரும் பாராட்டும் வகையில் திராவிட மாடல் அரசு செயல்பட்டது.

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் திருப்பணிகள் அனைத்தும் திராவிட மாடல் ஆட்சியில் செய்து முடிக்கப்பட்டு விட்டது. செப்டம்பர் 17 குடமுழுக்கு என்று கடந்த பிப்ரவரி மாதமே நாளும் குறிக்கப்பட்டு விட்டது. குறிக்கப்பட்ட நாளில் குடமுழுக்கை ஒழுங்காக நடத்தத் தெரியவில்லை த.வெ.க. அரசால்.

**ஒரே ஒரு குடமுழுக்கைக் கூட ஒழுங்காக நடத்தத் துப்பு இல்லை. ஆட்சிக்கு வந்ததும் பழனி முருகன் கோவில் நிலத்தை ஆட்டையைப் போட உதவி புரிந்த அமைச்சர் ரமேஷால் மதுரை மீனாட்சி அம்மன் கோவில் குடமுழுக்கைக் கூட ஒழுங்காக முறையாக நடத்தத் தெரியவில்லை. 'ஐந்து கட்சி மாறி அமாவாசை' நிர்மல் குமாரின் நிர்வாக லட்சணம் சந்தி சிரித்து விட்டது.**

அச்சடித்த 'பாஸ்களை' அநியாய விலைக்கு விற்று, உண்மையான பக்தர்களை ரோட்டில் பறிதவிக்க விட்டு, மதுரை மக்களையும், குடமுழுக்கை பார்க்க வந்த அனைத்து மக்களையும் உதாசீனப்படுத்தி ஒரு கேலிக்கூத்தை அலட்சியமாக நடத்தி இருக்கிறது விஜய் அரசு.

குடமுழுக்கை பார்க்க பக்தர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. பொதுமக்களை தூரத்தில் பல்வேறு சாலைகளில் பலமணி நேரம் நிறுத்தியதால் அவர்கள் மயக்கம் அடைந்துள்ளார்கள். 40க்கும் மேற்பட்டவர்கள் மயங்கி உள்ளார்கள். மதுரை அரசு மருத்துவமனையில் பலரும் சேர்க்கப்பட்டுள்ளார்கள். ஒருபோலீஸ்எஸ்.ஐ.யேமயக்கம்அடைந்துமருத்துவமனையில்சேர்க்கப்பட்டார். இன்னொரு கரூரை மதுரையில் காட்ட நினைத்துள்ளார்கள் என்பது தெரிகிறது.

கடந்த காலங்களில் குடமுழுக்கின் போது சித்திரை வீதிகளில் பக்தர்கள் அனுமதிக்கப்பட்டு குடமுழுக்கு நேரத்தில் கோபுரத்தை தரிசிக்க அனுமதிக்கப்பட்டனர். ஆனால் இப்போது சித்திரை வீதிகளிலும், ஆவணி வீதிகளிலும் பக்தர்கள் அனுமதிக்கப்படவில்லை. குடமுழுக்கின் போது கோபுரத்தை தூரத்தில் இருந்து தரிசிக்கக் கூட பக்தர்கள் முடியாமல் அவதிப்பட்டனர்.

குடகுழுக்கு முடிந்த பிறகு நான்கு வாசல்களில் இரண்டு வாசல்களை மூடி விட்டார்கள். அதையும் பக்தர்களுக்கு அறிவிக்கவில்லை. அனைத்து வாசல்களிலும் மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று முண்டியடித்தார்கள். தடுப்புக் காவலை தாண்டி மக்கள் ஓடியது வேதனையான காட்சியாக இருந்தது.

**கோயில் மேல்புறம் 20 ஆயிரம் பேர் வரை நிற்கலாம். ஆனாலும் 9000 அனுமதிச் சீட்டுகள் மட்டுமே அச்சடிக்கப்பட்டுள்ளது. அதிலும் 2000 சீட்டுகள் மட்டுமே குலுக்கள் முறையில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. அதிலும் அவர்கள் அந்த அனுமதிச் சீட்டைப் பெற்றுக் கொள்ள ஒரே ஒரு நாள் இடைவெளிதான் இருந்தது. அதனால் பதிவு செய்தவர்களில் பலரும் அதை வாங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. மற்ற அனுமதிச் சீட்டுகள் அனைத்தும் பத்தாயிரம் ரூபாய்க்கு பொதுவெளியில் விற்கப்பட்டுள்ளது. விஜய் படம் வெளியானால் பிளாக்கில் டிக்கெட் விற்பார்களே அதைப் போல!**

சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்கக் கூடிய மடாதிபதிகளுக்கே அனுமதிச் சீட்டுகள் கடைசி நேரத்தில் தரப்பட்டுள்ளது.மேலும் பலருக்கு தரப்படவே இல்லை.

சிறிய கிராமத்துக் கோயில்களில் கூட குடமுழுக்கு அன்று வந்திருப்பவர்கள் அனைவர் மீதும் குடமுழுக்கு புனித நீர் தெளிக்கப்படுவது வழக்கம். புனித நீரை தெளிக்காமல் இருந்திருந்தால் கூட பரவாயில்லை. வெறும் தண்ணீரை எடுத்து வந்து தெளித்ததால் பக்தர்கள் கடும் அதிருப்தி அடைந்துள்ளார்கள். 'குடமுழுக்கு ஏன் நடத்துகிறீர்கள்? பக்தர்களை எதற்காக ஏமாற்றுகிறீர்கள்?' என பொதுமக்கள் பொங்கினார்கள்.

எந்த ஒரு ஆலய திருவிழா என்றாலும் அந்தந்த மாவட்ட நிர்வாகம் ஆலயத்தின் வெளியே உள்ள பணிகளை எடுத்துக் கொள்ளும். கோயிலின் உள்ளே உள்ள பணிகளை அறநிலையத்துறை அதிகாரிகள், அறங்காவலர் குழுவினர் தலைமையில் உபயதாரர்கள் தீவிர பக்தர்கள் பேரவை என பல்வேறு அமைப்பினர் கருத்துகளை கோரிக்கைகளை ஒருங்கிணைந்து அதனை முன் நடக்கக்கூடிய கூட்டங்களில் கலந்துஆலோசித்து அதன்படி மாவட்ட நிர்வாகம் செயல்படுத்தும். ஆனால் இவை எதுவும் நடக்கவில்லை. எந்தவிதமான ஆலோசனைகளும் நடத்தப்படவில்லை. அர்ச்சகர்கள், ஓதுவார்கள், பக்தர்கள், அலுவலர்கள் ஆகியோரிடம் ஆலோசனை செய்யப்படவில்லை.

கோயில் அன்னதானம் குடமுழுக்கு அன்று 2000 பேருக்கு மட்டுமே நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கானவர்கள் வந்த இடத்தில் இவை எப்படி போதுமானதாக இருக்கும்? பொதுமக்கள் ஆங்காங்கே அன்னதானம் வழங்குவதற்கும் உணவு பாதுகாப்பு துறை கட்டுப்பாடு விதித்தது. இதன் காரணமாக அதிக அளவில் வழங்குவது தடைப்பட்டது. பலரும் உணவு கிடைக்காமல் திண்டாடினார்கள்.

கோயிலில் நடைபெறக்கூடிய அன்னதானம் நடைபெறக்கூடிய இடம் 250 பேர் மட்டுமே ஒரு நேரத்தில் சாப்பிட முடியும். ஆயிரக்கணக்கானவர்கள் எப்படி அதில் அமர்ந்து சாப்பிட முடியும்? மாற்று இடங்களை ஏற்பாடு செய்திருக்க வேண்டாமா?

**உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அவமதிக்கப்பட்டுள்ளார். 'தலைமை நீதிபதியாக இருந்தால் என்ன?' என்று அமைச்சர் ஜெகதீஸ்வரி கேட்டுள்ளார். பக்தர்கள் மொழியில் சொல்வதாக இருந்தால், 'இது தான் நேரம், கிரகம், தலையெழுத்து' ஆகும்.**

குடமுழுக்கு நாள் அன்று மட்டுமின்றி முதல் நாளே அப்பகுதியில் தடுப்புகள் அமைக்கப்பட்டு, அப்பகுதி மக்கள் ஆதார் கார்டுகள் இருந்தால் மட்டுமே வாகனங்கள் அனுமதிக்கப்பட்டது. அவர்களது உறவினர்கள் யாரும் மாடிகளில் இருந்து குடமுழுக்கு காணக் கூடாது மீறினால் வழக்கு பதிவு செய்யப்படும் என காவல்துறை மிரட்டல் விடுத்தது. இது அப்பகுதி மக்களிடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

சித்திரைத் திருவிழாவை போன்று கூட்டம் கூடியது. குடமுழுக்கை தூரத்தில் இருந்தாவது பார்த்து விடலாம் என தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வந்தவர்கள் அனைவரும் துரத்தி அடிக்கப்பட்டார்கள். மதுரை மீனாட்சி அம்மன் கோயிலைச் சுற்றி உள்ளே நுழைய முடியாமல் இரவிலேயே விரட்டி அடிக்கப்பட்டனர். நல்லவேளை, மதுரைக்கு உள்ளேயாவது அனுமதித்தார்களே?!

**தற்குறிகள் கையில் ஆட்சி அதிகாரம் போனால் என்ன நடக்கும் என்பதற்கு உதாரணமாக நடந்துள்ளது மதுரை மீனாட்சி அம்மன் கோவில் குடமுழுக்கு.**

**வயிறு எரியும் வகையில் ஒரு பெண் பக்தர் கோபத்தால் கொந்தளிக்கிறார். 'மதுரை மக்களின் கோபமும் சாபமும் இந்த ஆட்சி ஒழியனும்' என்று சாபம் இடுகிறார். கண்ணகி இட்ட சாபம் போல இருக்கிறது அது. அந்த வீடியோ சமூக வலைத்தளங்களில் இருந்து நீக்கப்பட்டுள்ளது. வீடியோவை நீக்கலாம். ஆனால் பக்தர்களின் மனதில் விழுந்துள்ள வடு மறையவே மறையாது.**

## முப்பெரும் விழாவில் தங்களின் உரை

# மக்களிடையே பெரும் வரவேற்பை ஏற்படுத்தி உள்ளது!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு பேராசிரியரின் புதல்வர் அ.அன்புச்செல்வன் நெகிழ்ச்சிக் கடிதம்!

**அ**ன்பு கெழுமிய நண்பர், தலைவர் பாசமிகு ஸ்டாலின் அவர்களே,

அன்பான வணக்கமும், வாழ்த்துகளும்,

உடல்நலம் சற்று தேறியவுடன், மீண்டும் கழகத்தவரிடையே தங்களை கண்டதும் மகிழ்ந்தோம்.

திராவிட மாதமான செப்டம்பரில், தொடர் கழக நிகழ்ச்சிகள் அனைத்தும் உணர்வு பூர்வமாக நடைபெறும். பேரறிஞர் அண்ணா வின் பிறந்தநாள், கழகம் தோற்றுவிக்கப்பட்ட நாள், திராவிடத் தத்துவத்தின் ஆசானான தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாள். தொடர் நிகழ்வுகள் ஆகியவை கழகத்தவர்க்கு உற்சாகத்தை மட்டுமல்ல, நமது இயக்க வரலாற்றையும் அதன் ஊடே கழகம் ஆற்றிய பணிகளையும் நினைவு கூறும் வகையில் அமையும். இத்தொடர் நிகழ்வுகளின் முத்தாய்ப்பாக முப்பெரும் விழாவும் நடைபெறும்.

கழகத்தின் வரலாற்றில் தடம் பதித்த தோழர்களை இனம் கண்டு திராவிட இயக்க முன்னோடிகளின் பெயர்களை சுமந்த விருதுகள் வழங்கப்படுவது உண்டு, இந்த ஆண்டு விருதுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு பேராசிரியர் இல்லத்து வாழ்த்துகள். விருதுக்கு பெருமை சேர்ப்பவர்களை கண்டறிந்த உங்களை போற்றுகிறேன். கழக செயல் வீரர்கள் பலரும் அவரவர் தொண்டு புரிந்



தமையை பாராட்டி அவர்களை கவுரவித்தும் சிறப்பு. அவர்களுக்கும் வாழ்த்துகள்.

**இன்றைய உங்கள் உரை அனைவரையும் கவரும் வகையில் சிறப்பாக இருந்தது. ஏமாற்றத்தை அளித்து வரும் தவெக ஆட்சியை சிறப்பாகச் சாடினீர்கள். மக்களின் அன்றாட பிரச்சினைகளை பட்டியலிட்டது மிகவும் அருமை. மின்வெட்டு பிரச்சனை, சட்டம் ஒழுங்கு சீர்குலைவு, தேர்தல் நேரத்தில் த.வெ.க. தந்த வாக்குறுதிகளை நிறை வேற்றாமல் ஏமாற்றுவது, சட்டமன்ற மாண்பை சீர்குலைக்கும் வகையில் செயல்படுவது, மக்கள் மீது திணிக்கப்பட்ட இடைத் தேர்தல் என்று கோர்வையாக தங்கள் பேச்சில் வெளிப்படுத்தியது மக்களிடையே பெரும் வரவேற்பை ஏற்படுத்தி உள்ளது.**

மேலும் சட்டமன்றத்தில் தவெக தலைவர் விஜயின் பேசிய பேச்சுக்கு தரமான பதிலடியை அளித்தது, கழகத்தவரும், இயக்க அனுதாபிகளும் மிகவும் ரசித்து மகிழ்ந்தனர். சட்டமன்ற தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட நேரத்தில் கொளத்தூர் தொகுதி மக்களின் நிலையும், நினைப்பும் திகைப்பை தந்தது, ஆனால் சட்டமன்ற நிகழ்வுகளை கண்ணுற்றப் பொழுது, தாங்கள் அந்த அவையில் இல்லாதிருப்பதே நன்று என்று பொதுமக்களும் நினைப்பதையே தாங்களும் சொன்னது மக்கள் மன்றத்தின் தரம் தாழ்ந்த நிலையை படம் பிடித்து காட்டியது.

மக்களிடையே தொடர்ந்து செயல்பட்டு, அவர்களுக்காக தொடர்ந்து குரல் கொடுப்பது கழகத்தின் பணி. அத்தகைய பணிகளை உங்களின் தலைமையில் தொடர்ந்து மேற்கொள்ள இந்த முப்பெரும் விழாவில் உறுதியேற்போம்.

கழகத்தவர் என்றும் உங்கள் பின்னால் அணிவகுப்போம். திமுக மீண்டெழும்!!! திமுக மீண்டும் வெல்லும். !!!

**வெல்க உங்கள் புகழ்!!!**

**வாழ்க உங்கள் கொற்றம்!!!!**

**தொடர்க தங்களின் தொய்வில்லா அரசியல் பயணம்!!!!**

**வெல்க! வாழ்க ! பேரறிஞர் அண்ணா மற்றும் தந்தை பெரியாரின் புகழ்!!!**

**வெல்க திராவிட முன்னேற்றக் கழகம்!!!!**

**அன்பன்,**

**அ.அன்புச்செல்வன்**

19,9,2026

# கழக முப்பெரும் விழாவில் 'முரசொலி செல்வம் விருது'!

**வி**ருதுநகர் மாவட்டம் வாழவந்தாள்புரத்தில் புலவர் மு.படிக்கராமு - முத்துலக்குமி இணையரின் மகனாகப் பிறந்த ப.திருமாவேலன், கோவில்பட்டியில் பள்ளிக் கல்வியைப் படித்தவர். சென்னை டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரியில் சட்டம் படித்தவர். இதழியல் ஆர்வம் காரணமாக பத்திரிக்கைத் தொழிலையே தன்னுடைய முழுநேரப் பணியாகத் தேர்ந்தெடுத்தார்.

சட்டக் கல்லூரியில் படிக்கும் போதே விடுதலைக்குயில்கள், இனி, போர்வாள் ஆகிய இதழ்களில் பணியாற்றினார். குங்குமம், விகடன் பேப்பர், ஆனந்தவிகடன், ஜூனியர் விகடன் ஆகிய இதழ்களில் செய்தியாளராக பணியாற்றினார். தினகரன், தமிழ்முரசு ஆகிய நாளிதழ்களின் தலைமைச் செய்தியாளராக இருந்தார். பின்னர் ஆனந்தவிகடன் பொறுப்பாசிரியராகப் பொறுப்பேற்றார். ஜூனியர் விகடன் இதழின் ஆசிரியராகவும் பதிப்பாளராகவும் பத்து ஆண்டுகள் இருந்தார்.

இப்போது கலைஞர் செய்திகள் தொலைக்காட்சியின் செய்திப்பிரிவுத் தலைமைப் பொறுப்பில் உள்ளார். முரசொலி நாளிதழில் தலையங்க ஆசிரியராக எட்டு ஆண்டுகளாக தொடர்ந்து பங்களித்து வருகிறார்.

கடந்த முப்பதாண்டு காலத்தில் பல நூறு பேட்டிகள், செய்தி விமர்சனக் கட்டுரைகள் எடுத்துள்ளார். சுதேசி தேசம் சுரண்டப்பட்ட வரலாறு, பெரியோர்களே தாய்மார்களே, நினைவுச்சிறகுகள், எனக்குப் பிடிக்கும் ஆகிய தொடர்களை எழுதி உள்ளார்.

மனைவி பெயர் ரேணுகா. அமிர்தா, அதிதி ஆகிய இரு மகள்கள் இவருக்கு.

இதுவரை வெளியான இவரது புத்தகங்கள்:

1.இன்றைய ஆட்சி ஏன் ஒழிய வேண்டும்?
2.காந்தி ராமசாமியும் பெரியார் ராமசாமியும்
3.காந்தியார் சாந்தியடைய
4.அரசியல் நல்லகண்ணு, அ.மார்க்ஸ் விவாதம்
5.தேர்தல் 2009
6.மனிதம் கொன்று மனம் தின்று ஈழம் இன்று
7.குற்றவாளிக் கூண்டில் ராஜபக்சே
8.நீங்கள் எந்தப் பக்கம்? மார்க்சிஸ்ட்டுகள் சிந்தனைக்கு
9.நடக்கட்டும் நாக்கு வியாபாரம்
10.சுதேசி தேசம் சுரண்டப்பட்ட வரலாறு
11.பெரியோர்களே தாய்மார்களே
12.யாரைத் தான் எதிர்க்கவில்லை?
13.ஆதிக்கசாதிகளுக்கு மட்டுமே அவர் பெரியாரா?
14.கடந்த காலத்தின் கனத்த சாட்சியங்கள்
15.இவர் தமிழர் இல்லை என்றால் எவர் தமிழர்?
16. கலைஞரின் பெரியார் நாடு,
17.அவர்கள் அவர்களே,



**திரு.ப.திருமாவேலன்**
**(முரசொலி செல்வம் விருது)**

18.எனக்கும் பிடிக்கும்
19. பண்டிதர் எஸ்.எஸ். ஆனந்தரின் தமிழ்நாடு
20. பெரியாரும் தமிழ்நாடும்
21. வைக்கம் வீரரும் ஜெயமோகனின் கயமையும்,
22. தீரர்கள் கோட்டம் தி.மு.க.
23. திராவிட அரசியல் திராவிட அரசு இயல்
24. முறை செய்து காப்பாற்றும் முதலமைச்சர் ஆகிய நூல்களை இதுவரை எழுதி வெளியிட்டுள்ளார்.

'இவர் தமிழர் இல்லை என்றால் எவர் தமிழர்' என்ற நூலை 2022 ஆம் ஆண்டு தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் வெளியிட்டார்கள். தீரர்கள் கோட்டம் திமுக, திராவிட அரசியல் திராவிட அரசு இயல் ஆகிய இரண்டு நூல்களையும் 2025 ஆம் ஆண்டு தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு அரங்கில் வெளியிட்டு சிறப்பித்தார்கள்.

இவரது இதழியல் பணியினை பாராட்டிடும் வகையில் முரசொலி அறக்கட்டளை சார்பில் நேற்று முன்தினம் (19.09.2026) சென்னை, அண்ணா அறிவாலயம் 'கலைஞர் அரங்கில்' நடைபெற்ற முப்பெரும் விழாவில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் "முரசொலி செல்வம் விருது" வழங்கிச் சிறப்பித்தார்.

**சென்னை,**
19.09.2026

**முரசொலி அறக்கட்டளை**
சென்னை